DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 854/2023

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

Name : ராமசந்திரன்

Father's Name : பெரியசாமி

Village :

Taluk :

District :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 10.02.2026.

**4ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி மாநகரம், கண்டோண்ட்மெண்ட் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.09.2021ம் தேதி காலை வாங்கல் செக்போஸ்ட் அருகே சுமார் காலை 05.30 மணிக்கு உதவி ஆய்வாளர் சத்யபிரியா, தலைமை காவலர் காந்தி செல்வன்,

காவலர் வசந்த் ஆகியோருடன் நானும் வாகன தணிக்கையில் இருந்தபோது, வடக்கு நோக்கி TN 28 M 8011 டாரஸ் லாரியை நிறுத்தியபோது அந்த லாரியை ஓட்டி வந்த சேகர் என்பவர் தப்பி ஓட முயற்சி செய்தார். அவரை துரத்தி பிடித்து விசாரித்தபோது, அதிலிருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு பையில் 457 மூட்டைகள் தலா 50 கிலோ வீதம் உடைந்த அரிசி மொத்தம் 22850 கிலோ அரிசியும், தலா 50 கிலோ எடையுள்ள 21 மூட்டைளும் மொத்தம் 1050 கிலோ அரிசியும் இருந்தது. அந்த அரிசி மூட்டைகளை ஒவ்வொன்றாக தணிக்கை செய்தபோது, அந்த அரிசி தமிழக அரசால் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ரேசன் அரிசி என்று தெரியவந்தது.

2. எதிரியை காலை 06.00 மணிக்கு கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி லாரி ஓட்டுனர் சேகர் என்பவரை விசாரித்தபோது மேற்படி லாரியை 23.09.2021ம் தேதி நாமக்கல் பெருந்துரையில் சிமெண்ட் மூட்டைகள் ஏற்றிக்கொண்டு மதுரை தெப்பக்குளம் அருகே இறக்கிவிட்டதாகவும், அன்று மதியம் வழக்கின் 3ம் எதிரியான லாரியின் உரிமையாளர் தினேஷ் என்பவரிடம் தொலைபேசியில் வேறு ஏதேனும் லோடு ஏற்றி செல்ல வேண்டுமா என்று கேட்டதற்கு 2ம் எதிரியான ஓம் சன் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வரும் ராஜேஷ் கண்ணா (எ) குமார் என்பவரிடம் அரிசி மூட்டை லோடு இருப்பதாகவும் அதை ஏற்றிக்கொண்டு நாமக்கல் முத்து பால்ட்ரி ஏஜென்சி நிறுவனத்தில் மூட்டைகளை இறக்கி வருமாறும் கூறியதாகவும் கூறினார். அவ்வாறு ஏற்றி வரும்போது அரவக்குறிச்சி செக்போஸ்ட்டில் போலிசார் வாகன தணிக்கை செய்வார்கள் என பயந்துகொண்டு பள்ளப்பட்டி வழியாக மோகனூர் நோக்கி வந்ததாகவும் கூறினார்.

3. பின்னர் அவர் தன்னிச்சையாக தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டதால் சம்பவ இடத்தில் பொதுவான சாட்சிகள் இல்லாத நிலையில் என் முன்னிலையிலும், தலைமை காவலர் காந்தி செல்வன் அவர்கள்

முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் அரிசி மூட்டைகளை கைப்பற்றினோம். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் சத்ய பிரியா அவர்கள் முதல் அறிக்கை பதிவு செய்ய உதவியாக இருந்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

1. நாங்கள் ரோந்துக்கு காவல் நிலையத்திலிருந்து காலை சுமார் 04.00 மணிக்கு கிளம்பினோம். நான் எனது முதல் விசாரணையிலும், போலிசார் விசாரணையிலும் எந்தெந்த இங்களுக்கு ரோந்துக்கு சென்றோம் என்பதை பற்றி குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி வாங்கல் செக்போஸ்ட்டுக்கு வாகன தணிக்கைக்காக காலை சுமார் 05.00 மணிக்கு சென்றோம். அன்றைய தினம் சுமார் 5 வாகங்களை தணிக்கை செய்தோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது கரூர் – நாமக்கல் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். சம்பவ இடம் வாகன போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி என்றால் சரியல்ல. நாங்கள் ரோந்துக்கு செல்லும்போது சாக்கு மூட்டைகளில் இருக்கும் அரிசியை குத்தி எடுத்து சோதனை செய்யும் ஊசியை எடுத்துச் சென்றோம். நாங்கள் ரோந்துக்கு செல்லும்போது எடை மெஷின் எடுத்து செல்லவில்லை என்றால் சரிதான்.

2. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் தனி நபர் சாட்சிகள் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் அங்கு வேறு சாட்சிகள் யாரும் இல்லை. நாங்கள் கைப்பற்றிய மூட்டைகள் வெள்ளை நிற பிளாஸ்டிக் பையாகும். அந்த அரிசி மூட்டைகளில் அரசாங்க முத்திரை எதுவும் இல்லை என்றால் சரிதான். நாங்கள் ரோந்துக்கு செல்லும்போது ரேசன் அரிசிதான் என்பதை கண்டறிய பகுப்பாய்வாளர் யாரையும் எங்களுடன் அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி மூட்டைகளில் இருந்த அரிசியை நாங்கள் உத்தேசமாகத்தான் ரேசன் அரிசி என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி அரிசி மூட்டைகளின் எடையை உத்தேசமாகத்தான் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். எதிரியிடமிருந்து 06.15 முதல் 07.15 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனைத்து பக்கத்திலும் சாட்சிகள் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். கடைசி பக்கத்தில் மட்டுமே உள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாம் பக்கத்தில் எதிரியின் கையொப்பமும், சாட்சியின் கையொப்பமும் இல்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதியது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான்தான் எழுதினேன்.

3. ஒப்புதல் வாக்குமூலத்தில் பொவான சாட்சிகள் யாரிடமும் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் அரிச இருந்த மூட்டைகள் கோணிப்பையா, சாக்குப்பையா என்பது பற்றி கூறவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரை நான்தான் தயார் செய்தேன் என்றால் சரிதான். டேக்ஸ் இன்வாய்சை கைப்பற்றியதாக கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து எந்த ஒரு

சான்றுப் பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிவரக் கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகள் போட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./—எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 854/2023

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

Name : காந்தி செல்வன்

Father's Name : சுப்பையன்

Village :

Taluk :

District :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 10.02.2026.

**4ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் மாவட்டம், சின்னதாராபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.09.2021ம் தேதி காலை வாங்கல் செக்போஸ்ட் அருகே சுமார் காலை 05.30 மணிக்கு உதவி ஆய்வாளர் சத்யபிரியா, சிறப்பு உதவி ஆய்வாளர் ராமசந்திரன், காவலர் வசந்த்

ஆகியோருடன் நானும் வாகன தணிக்கையில் இருந்தபோது, வடக்கு நோக்கி TN 28 M 8011 டாரஸ் லாரியை நிறுத்தியபோது அந்த லாரியை ஓட்டி வந்த சேகர் என்பவர் தப்பி ஓட முயற்சி செய்தார். அவரை துரத்தி பிடித்து விசாரித்தபோது, அதிலிருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு பையில் 457 மூட்டைகள் தலா 50 கிலோ வீதம் உடைந்த அரிசி மொத்தம் 22850 கிலோ அரிசியும், தலா 50 கிலோ எடையுள்ள 21 மூட்டைளும் மொத்தம் 1050 கிலோ அரிசியும் இருந்தது. அந்த அரிசி மூட்டைகளை ஒவ்வொன்றாக தணிக்கை செய்தபோது, அந்த அரிசி தமிழக அரசால் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ரேசன் அரிசி என்று தெரியவந்தது.

2. எதிரியை காலை 06.00 மணிக்கு கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி லாரி ஓட்டுனர் சேகர் என்பவரை விசாரித்தபோது மேற்படி லாரியை 23.09.2021ம் தேதி நாமக்கல் பெருந்துரையில் சிமெண்ட் மூட்டைகள் ஏற்றிக்கொண்டு மதுரை தெப்பக்குளம் அருகே இறக்கிவிட்டதாகவும், அன்று மதியம் வழக்கின் 3ம் எதிரியான லாரியின் உரிமையாளர் தினேஷ் என்பவரிடம் தொலைபேசியில் வேறு ஏதேனும் லோடு ஏற்றி செல்ல வேண்டுமா என்று கேட்டதற்கு 2ம் எதிரியான ஓம் சன் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வரும் ராஜேஷ் கண்ணா (எ) குமார் என்பவரிடம் அரிசி மூட்டை லோடு இருப்பதாகவும் அதை ஏற்றிக்கொண்டு நாமக்கல் முத்து பால்ட்ரி ஏஜென்சி நிறுவனத்தில் மூட்டைகளை இறக்கி வருமாறும் கூறியதாகவும் கூறினார். அவ்வாறு ஏற்றி வரும்போது அரவக்குறிச்சி செக்போஸ்ட்டில் போலிசார் வாகன தணிக்கை செய்வார்கள் என பயந்துகொண்டு பள்ளப்பட்டி வழியாக மோகனூர் நோக்கி வந்ததாகவும் கூறினார்.

3. பின்னர் அவர் தன்னிச்சையாக தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டதால் சம்பவ இடத்தில் பொதுவான சாட்சிகள் இல்லாத நிலையில் என் முன்னிலையிலும், சிறப்பு உதவி ஆய்வாளர் ராமசந்திரன்

முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் அரிசி மூட்டைகளை கைப்பற்றினோம். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் சத்ய பிரியா அவர்கள் முதல் அறிக்கை பதிவு செய்ய உதவியாக இருந்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

எங்களது காவல் நிலையத்தில் பொது நாட்குறிப்பு பராமரித்து வருகிறோம் என்றால் சரிதான். பொது நாட்குறிப்பேட்டில் ரோந்துக்கு செல்வது வருவது குறித்த விவரங்கள் பதிவு செய்வோம் என்றால் சரிதான். பொது நாட்குறிப்பில் சம்பவத்தின்போது சென்றதை பதிவு செய்துள்ளோம் என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து ரோந்துக்கு நாங்கள் காலை 04.00 மணிக்கு கிளம்பி 04.30 மணிக்கு சம்பவ இடம் சென்றோம். நாங்கள் வாங்கல் செக்போஸ்ட்டில் வாகன தணிக்கை செய்தோம். அ.சா.1 பசுபதிபாளையத்தில் தணிக்கை செய்துவிட்டு வாங்கல் சென்றோம் என்று சொன்னது தவறு என்றால் எனக்கு ஞாபகமில்லை. பசுபதிபாளையத்தில் நான் சென்று எவ்வளவு நேரம் தணிக்கையில் இருந்தோம் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. வாங்கலில் தணிக்கை செய்தது ஞாபகம் உள்ளதா என்றால் உள்ளது. அப்போது சுமார் 5,6 வாகனங்களை தணிக்கை செய்திருப்போம். 1ம் எதிரி சேகர் வாகனம் ஓட்டி வந்ததாக சொல்லப்படும் நேரம் 05.30 மணியாகும். காலை 06.15 மணி முதல் 07.15 மணி

வரை மேற்படி வாகனத்தை சோதனை செய்தோம்.

2. சோதனையின் போது மூட்டைகளை குத்தி அரிசி எடுத்து சோதனை செய்ய குத்தூசி, டார்ச் லைட், ரிப்லக்ட் ஜாக்கெட் ஆகியவைகளை நாங்கள் உடன் எடுத்து சென்றோம். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடமானது வாங்கல் – மோகனூர் சாலை என்றால் சரிதான். அது போக்குவரத்து நிறைந்த சாலை என்றால் சரிதான். போலிசார் சாட்சிகளை தவிர தனி நபர் சாட்சியாக யாரையும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். தனி நபர் சாட்சிகளை அழைத்ததாகவும், அவர்கள் வரவில்லை என்பதையும், அவர்களுடைய பெயர் முகவரி எதையும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. காலை 06.15 – 07.15 மணி வரை எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரி சேகர்தான் எழுதினார். எதிரியிடமிருந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் வாங்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றாலும் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த ஒரு சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் கைப்பற்றியதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. புள்ளிவிவரக் கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 854/2023

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | வசந்த் |
| Father's Name | : | சங்கர் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 10.02.2026.

**4ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் மாவட்டம், சின்னதாராபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.09.2021ம் தேதி காலை வாங்கல் செக்போஸ்ட் அருகே சுமார் காலை 05.30 மணிக்கு உதவி ஆய்வாளர் சத்யபிரியா, சிறப்பு உதவி ஆய்வாளர் ராமசந்திரன், காவலர் காந்தி செல்வன் ஆகியோருடன் நானும்

வாகன தணிக்கையில் இருந்தபோது, வடக்கு நோக்கி TN 28 M 8011 டாரஸ் லாரியை நிறுத்தியபோது அந்த லாரியை ஓட்டி வந்த சேகர் என்பவர் தப்பி ஓட முயற்சி செய்தார். அவரை துரத்தி பிடித்து விசாரித்தபோது, அதிலிருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு பையில் 457 மூட்டைகள் தலா 50 கிலோ வீதம் உடைந்த அரிசி மொத்தம் 22850 கிலோ அரிசியும், தலா 50 கிலோ எடையுள்ள 21 மூட்டைளும் மொத்தம் 1050 கிலோ அரிசியும் இருந்தது. அந்த அரிசி மூட்டைகளை ஒவ்வொன்றாக தணிக்கை செய்தபோது, அந்த அரிசி தமிழக அரசால் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ரேசன் அரிசி என்று தெரியவந்தது.

2. எதிரியை காலை 06.00 மணிக்கு கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி லாரி ஓட்டுனர் சேகர் என்பவரை விசாரித்தபோது மேற்படி லாரியை 23.09.2021ம் தேதி நாமக்கல் பெருந்துரையில் சிமெண்ட் மூட்டைகள் ஏற்றிக்கொண்டு மதுரை தெப்பக்குளம் அருகே இறக்கிவிட்டதாகவும், அன்று மதியம் வழக்கின் 3ம் எதிரியான லாரியின் உரிமையாளர் தினேஷ் என்பவரிடம் தொலைபேசியில் வேறு ஏதேனும் லோடு ஏற்றி செல்ல வேண்டுமா என்று கேட்டதற்கு 2ம் எதிரியான ஓம் சன் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வரும் ராஜேஷ் கண்ணா (எ) குமார் என்பவரிடம் அரிசி மூட்டை லோடு இருப்பதாகவும் அதை ஏற்றிக்கொண்டு நாமக்கல் முத்து பால்ட்ரி ஏஜென்சி நிறுவனத்தில் மூட்டைகளை இறக்கி வருமாறும் கூறியதாகவும் கூறினார். அவ்வாறு ஏற்றி வரும்போது அரவக்குறிச்சி செக்போஸ்ட்டில் போலிசார் வாகன தணிக்கை செய்வார்கள் என பயந்துகொண்டு பள்ளப்பட்டி வழியாக மோகனூர் நோக்கி வந்ததாகவும் கூறினார். பின்னர் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் சத்ய பிரியா அவர்கள் முதல் அறிக்கை பதிவு செய்ய உதவியாக இருந்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

எங்களது காவல் நிலையத்தில் பொது நாட்குறிப்பு பராமரித்து வருகிறோம் என்றால் சரிதான். பொது நாட்குறிப்பேட்டில் ரோந்துக்கு செல்வது வருவது குறித்த விவரங்கள் பதிவு செய்வோம் என்றால் சரிதான். பொது நாட்குறிப்பில்

சம்பவத்தின்போது சென்றதை பதிவு செய்துள்ளோம் என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து ரோந்துக்கு நாங்கள் இரவு 10.00 மணிக்கு கிளம்பி காலை 05.30 மணிக்கு சம்பவ இடம் சென்றோம். நாங்கள் வாங்கல் செக்போஸ்ட்டில் வாகன தணிக்கை செய்தோம். அப்போது எத்தனை வாகனங்களை தணிக்கை செய்தோம் என்று ஞாபகமில்லை. 1ம் எதிரி சேகர் வாகனம் ஓட்டி வந்ததாக சொல்லப்படும் நேரம் 06.00 மணியாகும். இரவு முதலே வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தோம். சோதனையின் போது மூட்டைகளை குத்தி அரிசி எடுத்து சோதனை செய்ய குத்தூசி, டார்ச் லைட் ஆகியவைகளை நாங்கள் உடன் எடுத்து சென்றோம். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடமானது வாங்கல் – மோகனூர் சாலை என்றால் சரிதான். அது போக்குவரத்து நிறைந்த சாலை என்றால் சரியல்ல. இரவு நேரம் என்பதால் லோடு வண்டி மட்டும்தான் போகும். போலிசார் சாட்சிகளை தவிர தனி நபர் சாட்சியாக யாரையும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரி சேகர்தான் எழுதினார். எதிரியிடமிருந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் வாங்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றாலும் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த ஒரு சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் கைப்பற்றியதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. புள்ளிவிவரக் கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**